**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC 56/2020 <br> Sessions : <br> Deposition of Witness for : LW-14 /PW-12 <br> Name : துர்கா காவல் ஆய்வாளர் <br> Father's/Husband's Name : செந்தில் <br> Nationality : Indian | Village: <br> Age : 50 <br> Taluk : <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 25.03.2026**

சாட்சியை பந்தநல்லூர் தலைமை காவலர் திரு. பிரபாகரன் என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**<u>குறுக்கு விசாரணை</u>**

புகார்தாரர் முதலாவது எதிரிக்கு எதிராக என்ன குற்றச்சாட்டு கூறி புகார் கொடுத்தார் என்றால் புகார் தாரர் 6 மாத கர்ப்பமாக இருப்பதாகவும், கர்ப்பத்திற்கு முதலாவது எதிரி காரணம் என்றும் அவர் புகார்தாரரை திருமணம் செய்ய மறுக்கிறார் என்றும் புகார் கொடுத்தார் . இந்த வழக்கில் புகார்தாரரின் கர்ப்பத்திற்கு 1ம் எதிரி காரணமா என்று கண்டறிய டிஎன்ஏ டெஸ்ட்க்கு நான் அனுப்பினேனா என்றால் குழந்தை பிறந்த பின்னிட்டடு தான் டிஎன்ஏ டெஸ்டுக்கு அனுப்ப முடியும் என்று கூறியதால் நான் அனுப்பி

வைக்கவில்லை. விசாரித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் எதிரிக்கு எதிராக 417, 493, 506(2), 294(பி) இதச வின் கீழ் வழக்கு பதிவு செய்து இறுதியறிக்கையை கடந்த 05.11.2019 அன்று தாக்கல் செய்தேன். கண்ணுற்ற சாட்சிகளாக இரண்டு நபர்கள் விசாரித்துள்ளேன் அவர்கள் கேள்வி நிலை சாட்சிகள் என்றால் சரியல்ல. 493 இதச பிரிவை பொறுத்து 1வது எதிரிக்கும் புகார்தாருருக்கு பிறந்த குழந்தைக்கும் டிஎன்ஏ டெஸ்ட் எடுக்கவில்லை என்றால் சரிதான், நான் பணி மாறுதலில் சென்றுவிட்டேன். புகார்தாரர் எனது விசாரணையை 5 மாத கர்ப்பமாக இருப்பதாக கூறியுள்ளார். அ.சா.7 மருத்துவர் அசா.1 ஆறுமாத கர்ப்பமாக இருப்பதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். இதச 493 1வது எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை பொறுத்து நிரூபணம் செய்யவேண்டமென்றால் மரபணு சோதனை செய்திருக்க வேண்டும் என்றால் சரிதான். மரபணு சோதனை செய்யாததால் புகார்தாரரின் குழந்தைக்கு எதிரிதான் காரணம் என்று கண்டறிய இயலாது என்றால சரிதான். மேற்படி குற்ற வழக்கின் 1ம் எதிரிகக்கும் புகார்தாரருக்கும் எந்த உறவும் இல்லை என்றாலும், மேற்படி குற்றச்சாட்டிற்கும் 1ம எதிரிக்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றால்ச ரியல்ல. நான் சொல்லும் நாள் நேரத்தில் இந்த குற்ற சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், நான் சரியாக புலன் விசாரணை செய்யவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. மேற்படி வழக்கில் எதிரிகள் மீது உள்ள காழ்ப்புணர்ச்சியில் புகர் தாரர் பொய்யாக புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

என் முன்னால் எதிரிகளின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeswari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர். (FAC)**